MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group — Adding years of healthy life
NUH National University Hospital — A member of the NUHS
Alexandra Health
EASTERN HEALTH ALLIANCE
Jurong Health
SingHealth

SINGHEALTH / PIL / T123R0

நோயாளி தகவல் கையேடு

# குவினோலோன் ஆன்டிபயோடிக் மருந்துகள்

## (QUINOLONE ANTIBIOTICS)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

குவினோலோன் (quinolones) என்பவை, நுண்கிருமித் தொற்றுகளுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படும் ஆன்டிபயோடிக் மருந்துகளாகும். சிறுநீர்க்குழாய், மூச்சுக்குழாய், இரைப்பை-சிறுகுடல் பகுதி, கண் மற்றும் காதுகளில் ஏற்படும் கிருமித் தொற்றுகள் இதில் அடங்கும்.

குவினோலோன் ஆன்டிபயோடிக் மருந்துகளுக்கு உதாரணங்கள், சிப்ரோ.்.ப்லோக்ஸாசின் (ciprofloxacin), லெவோ.்.ப்லோக்ஸாசின் (levofloxacin), ஒ.்.ப்லோக்ஸாசின் (ofloxacin), மோக்ஸி.்.ப்லோக்ஸாசின் (moxifloxacin), கேட்டி.்.ப்லோக்ஸாசின் (gatifloxacin) மற்றும் நலிடிக்சிக் அமிலம் (nalidixic acid).

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

சிப்ரோ.்.ப்லோக்ஸாசின், லெவோ.்.ப்லோக்ஸாசின் மற்றும் நலிடிக்சிக் அமில மருந்துகளை வெறும் வயிற்றில் எடுக்க வேண்டும். மோக்ஸி.்.ப்லோக்ஸாசின், கேட்டி.்.ப்லோக்ஸாசின் மற்றும் ஒ.்.ப்லோக்ஸாசின் மருந்துகளை உணவுடனோ அல்லது வெறும் வயிற்றிலோ எடுக்கலாம்.

பால் அல்லது பால் பொருட்கள், அமில எதிர்ப்பிகள் (antacids) போன்ற அஜீரண நிவாரணிகள், அல்லது இரும்புச்சத்து, துத்தநாகம் (zinc), கால்சியம் அல்லது அலுமினியம் கலந்த மருந்துகளை குவினோலோன் மருந்துகளோடு ஒரே நேரத்தில் எடுக்காதீர்கள். இவை குவினோலோன் மருந்துகளுக்கும் இவற்றுக்கும் இடையில் 2 – 4 மணி நேர இடைவெளி விடவேண்டும்.

மருந்து எடுக்கத் தொடங்கிய சில நாட்களில் குணம் தெரிய ஆரம்பித்தாலும், கொடுக்கப்படும் மருந்து எல்லாவற்றையும் நீங்கள் முடித்துவிட வேண்டும். மருந்தைப் பாதியில் நிறுத்தினால் கிருமித்தொற்று மீண்டும் ஏற்படலாம் அல்லது மருந்துக்கு எதிர்ப்பு உருவாகலாம்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது ?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

குமட்டல், வாந்தி, பசியின்மை அல்லது சுவையில் சிறு மாற்றங்கள் உங்களைப் பாதிக்கலாம் (சிறு அளவுகளில் அடிக்கடி உண்பது அல்லது மருந்து மிட்டாய் சப்புவது, இந்தப் பாதிப்புகளைக் குறைக்க உதவும்). வெளிச்சத்திற்கு கண்கள் அதிகமாகக் கூசலாம் (இந்த மருந்துகளை எடுக்கும்போது சூரியக்கதிர்த்தடுப்புக் களிம்பு பயன்படுத்துங்கள், சூரியப் பாதுகாப்பு உடைகள் அணியுங்கள் மற்றும் அதிகச் சூரிய ஒளியில் வெளியில் செல்வதைத் தவிருங்கள்).

செரிமானக் கோளாறு, அடிவயிற்று வலி, வயிற்றுப்போக்கு, தலைவலி மற்றும் தலைச்சுற்றல் போன்ற சாதாரண பக்க-விளைவுகளும் ஏற்படலாம்.

தோல் தடிப்புகள், முட்டு அல்லது தசை நாண் (tendon) வலி அல்லது அழற்சி, முகம் வீங்குதல், சுவாசிக்கச் சிரமப்படுதல் அல்லது இரத்தத்துடன் கூடிய கடுமையான வயிற்றுப்போக்கு ஆகியவை இருந்தால், மருத்துவரை உடனே பாருங்கள். நெஞ்சு வலி அல்லது இருதயப் படபடப்பு இருந்தால், உடனே மருத்துவ உதவி நாட வேண்டும்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

பின்வருபவை இருந்தால் மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்

- வலிப்பு நோய், G6PD பற்றாக்குறை, தசைச் சோர்வு நோய் (மயாஸதஹநெிா ஙராவிஸ) போன்ற மருத்துவப் பிரச்சினைகள் இருத்தல்.
- வேறு மருந்துகள் (குறிப்பாக, NSAIDS எனப்படும் ஸ்டெராய்டு-அல்லாத அழற்சி-எதிர்ப்பு மருந்துகள் போன்ற வலி நிவாரணிகள், தியோ.்.பிலீன், சைக்ளோஸ்போரின், புரோபெனெசிட், வார்.்.பரின் போன்ற இரத்த அடர்த்திக் குறைப்பு மருந்துகள்), மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வருதல்.
- வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருத்தல், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்படுதல். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்; முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.
- நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வருதல், கர்ப்பமாக இருத்தல், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருத்தல்.
- உங்களுக்கு இருதயப் பிரச்சினைகள் இருத்தல் அல்லது இருதயத் துடிப்பைச் சீராக்குவதற்கு நீங்கள் மருந்து உட்கொண்டு வருதல்.
- வலிப்பு நோய் உங்களைப் பாதித்திருத்தல் அல்லது அதைத் தடுக்க நீங்கள் மருந்து உட்கொண்டு வருதல்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும்?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.